සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**Department of Samurdhi Development**

මුදල් අමාත්‍යාංශය

සමෘද්ධි , ගෘහ ආර්ථික, ක්ෂුද්‍ර මූල්‍ය, ස්වයං රැකියා, ව්‍යාපාර සංවර්ධන හා උඌණ උපයෝජන රාජ්‍ය සම්පත් සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය

நிதி அமைச்சு

**சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

Ministry of Finance

State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance, Self Employment, Business Development and Underutilized State Resources Development


| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>**My No** DSD/HO/02/Ad/05/SDO/EB/2020 | ඔබේ අංකය<br>உமது இல<br>**Your No** ........................................... | දිනය<br>திகதி<br>**Date** 2020.12.21 |

சகல மாவட்ட செயலாளர்கள் / மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்,
மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர்கள் / உதவிப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு.

**சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பொருட்டு நடைபெறும் Iவது வினைதிறன் தடைதாண்டல் பரீட்சை – 2020**

மேற்படி விடயம் தொடர்பில் தங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ள எனது சம இலக்கமும் 2020.12.04, 2020.12.10ம் திகதிகளிடப்பட்ட வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை – 2020 தொடர்பான அறிவித்தல்களுக்கு மேலதிகமாக

02. மேற்படி அறிவித்தலின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் மேற்படி பரீட்சையானது 2021 ஜனவரி மாதம் 23ம் திகதி சனிக்கிழமை தினத்தில் மாவட்ட ரீதியாக நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ள்ப்பட்டுள்ளன.

03. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைக்கு மத்தியில் விண்ணப்பதாரிகளால் தபால் மூலம் அனுப்பும் பரீட்சை விண்ணப்பப்படிவங்கள் தலைமைக் காரியாலயத்திற்கு கிடைக்கும் போது ஏதும் தாமதங்கள் ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்கு தீர்வொன்றாக 2020.12.04ம் திகதியிடப்பட்ட எனது கடிதத்தின் மூலம் மின்னஞ்சல் மூலமும் அந்த விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்குமாறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

04. மேற்படி பரீட்சையின் பொருட்டு தங்களது மாவட்டத்திலிருந்து தோற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஆயத்தமாகும் முதலாவது நடவடிக்கையொன்றாக இரு நாட்களில் மூன்று கருத்தரங்கு வேலைத்திட்டங்கள் 2020.12,30 மற்றும் 31ம் திகதி ஆகிய தினங்களில் ZOOM தொழில்நுட்பத்தின் ஊடாக தலைமைக் காரியாலயத்திலிருந்து நடாத்தப்படவுள்ளது. ஆகையினால் தங்களது மாவட்டத்தின் வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையில் தோற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கு அக்கருத்தரங்கின் பொருட்டு கலந்துகொள்ளத் தேவையான ஆலோசனைகளை துரிதமாக வழங்குமாறும் வினயமுடன் அறியத்தருகின்றேன்.

05. இக் கருத்தரங்கு வேலைத்திட்டத்தினை ஒழுங்கு செய்யும்போது கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தங்களது கவனத்தினை செலுத்துமாறு மேலும் அறியத்தருகின்றேன்.

- இந் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைக்கேற்ப அதற்குப் பொருத்தமான வசதிகள் உள்ள இடம் ஒன்றினை தெரிவு செய்துகொள்ளல்.
- ZOOM தொழில்நுட்பத்தின் ஊடாக நடாத்தப்படும் இக்கருத்ததரங்கின் இறுதியில் அவை தொடர்பானதாக உருவாகும் சிக்கல்கள் தொடர்பில் கலந்துறையாட / மீளாள்வு செய்ய அந்தந்த விடயங்களின் பொருட்டு பொருத்தமான வளவாளர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளல், அதற்கான வளவாளர் கொடுப்பனவு செலுத்தப்படும்.


**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

- கலந்துகொள்ளும் எண்ணிக்கையினருக்கு போதுமானளவு பிரகாரம் Multimedia, கற்புல செவிப்புல உபகரணங்களைப் பயன்படுத்துதல்.
- மேற்படி நிகழ்ச்சியில் இணைந்து கொள்வதற்குத் தேவையாகன ZOOM Link ஐ Samu.Exe.Meeting Group இல் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்கு செய்யும் போது தங்களது வசதியின் பொருட்டு தங்களது அலுவலகத்தின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரை பெயரிட்டு அந்த உத்தியோகத்தரின் தொலைபேசி இலக்கம், Whats App மற்றும் மின்னஞ்சல் முகவரியை வழங்குதல்.
- சுகாதார அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப வேலைத்திட்டத்தினை ஒழுங்குசெய்தல்.

06. மேலும் தங்களது மாவட்டத்தின் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள இந்த கருத்தரங்கில் கலந்துகொள்ளவுள்ள உத்தியோகத்தர்களின் முழுவிபரங்களடங்கிய அறிக்கையொன்றினை கீழ் குறிப்பிடப்படும் படிவங்களுக்கமைய தயாரித்து மின்னஞ்சல் ஊடாக 2020.12.31ம் திகதிக்கு முன்னர் எனக்கு சமர்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன். (மின்னஞ்சல் முகவரி – adsamurdhi2014@gmail.com)

| தொ.இல | பிரதேச செயலகப் பிரிவு | முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | கையடக்க தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

07. இப்பட்டறையினை / கருத்தரங்கினை ஒழுங்குசெய்யம் போது செலவாகும் தொகையினை மதிப்பீடு செய்து துரிதமாக எனக்கு அனுப்புமாறு மேலும் அறியத்தருகின்றேன்.

ஆர்.பீ.பீ. திலக்கசிறி
பணிப்பாளர் தலைமையதிபதி

**பிரதிகள் :-**

01. செயலாளர் - சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில், மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு - த.கூ.க.பொருட்டு

02. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - அ.கொ.பொருட்டும்

03. பிரதம கணக்காளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - அ.கொ.பொருட்டும் உ.ந.பொருட்டும்